**<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>**

**<u>நாள் – 02.06.2026</u>**

**OS.39/2022**

**வா.சா.1 திரு.ரமேஷ்**

**வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் கட்டவடிச்சாம்பட்டி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். அங்கு நான் எத்தனை வருடமாக குடியிருந்து வருகிறேன் என்றால் எனது பூர்வீகமே அங்குதான். இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் ஒரு நிலத்தை வாங்கினேன் அந்த நிலத்தில் பிரதிவாதிகள் அத்துமீறி நுழைந்தார்கள் அதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் யாரிடம் இருந்து நிலத்தை வாங்கினேன் என்றால் ஜெயவேல் என்பவரிடம் இருந்து வாங்கினேன். எந்த வருடம் நான் நிலத்தை வாங்கினேன் என்றால் 2021ம் வருடம். அந்த நிலம் ஜெயவேலுக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியமா அல்லது அது ஜெயவேலுக்கு பூர்வீக சொத்தா என்றால் அது ஜெயவேலுக்கு பூர்வீக சொத்து, அந்த சொத்துக்களில் சர்வே எண்.61/2B அல்லது 61 / 2C என்ற நிலம் மட்டும் ஜெயவேல் அம்மாவிற்கு தனிப்பட்ட முறையில் பாத்தியம். நான் கிரையம் வாங்கிய நிலம் ஜெயவேலுவுக்கு தனிப்பட்ட முறையில் பட்டா அவர் பெயரில் ஏற்பட்டதா என்றால் ஆமாம், அவர் பெயரில் ஏற்பட்டது. நான் சொத்தை வாங்குவதற்கு முன்பாகவே ஜெயவேல் பெயரில் பட்டா இருந்ததா என்றால் ஆமாம், 1997–ல் இருந்தே அவர் பெயரில் இருந்தது.

2. ஜெயவேல் பாகமாக வந்த நிலத்தில் பிரதிவாதிகள் நான் நிலத்தை கிரையம் வாங்கும் முன்பாகவே அந்த நிலத்தின் வழியே பாதை அமைத்து சென்று கொண்டிருந்தார்கள் என்றால் இல்லை. நான் கிரையம் பெற்ற நிலத்தில் கிணறு இருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், 2 சர்வே எண்களிலும் தனித்தனியாக கிணறு உள்ளது. அந்த கிணற்றில் ஜெயவேல் என்பவரின் அண்ணன் ஜெயராமன் என்பவருக்கும் பாத்தியம் இருந்தது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. நான் நிலம் கிரையம் வாங்கிய பிறகுதான் அந்த நிலத்தில் இருந்த கிணற்றுக்கு மின்இணைப்பு பெற்றேன் என்றால் ஏற்கனவே ஒரு கிணற்றில் மின்இணைப்பு இருந்தது நான் கிரையம் வாங்கிய பிறகு ஒரு கிணற்றில் மட்டும் மின்இணைப்பு வாங்கினேன். நான் மின்இணைப்பு வாங்கிய கிணறு எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் 62/2C2ல் உள்ளது.

3. நான் ஜெயவேலுவிடம் எவ்வளவு நிலம் கிரயம் வாங்கினேன் என்றால் 1 ஏக்கர் 74 செண்ட். அந்த நிலத்தில் வீடுகட்டி குடியிருந்து வருவதாக சொல்லியுள்ளேன் எப்போது நான் வீடுகட்டினேன் என்றால் 2021ம் ஆண்டு. அந்த வீட்டிற்கு மின்இணைப்பு வாங்கிவிட்டேனா என்றால் சரிதான், அதன் சர்வீஸ் எண்.303 ஆகும். நான் நிலத்தை கிரையம் பெற்ற பிறகு பிரதிவாதிகள் நான் அனுபவம் செய்வதில் தொந்தரவு செய்வதாக சொல்லியுள்ளேன் அது யார் என்றால் இந்திரா, ரவீந்திரன், ராஜேந்திரன் ஆகியோர். நான் மேற்படி நபர்கள் அக்கிரம பிரவேசம் செய்து என்னுடைய

நிலத்தில் அத்துமீறி உள்நுழைய வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

4. என்னை பிரதிவாதிகள் இரவோடு இரவாக தாக்க வந்ததாக சொல்லியுள்ளேன் அது எந்த தேதியில் என்றால் தேதி எனக்கு நினைவில்லை. மேற்படி சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அந்த புகாரின் பேரில் போலிசார் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். என்ன காவல் நிலையத்தில் முடிவானது என்றால் பிரதிவாதிகளிடம் பிரச்சனை செய்யக்கூடாது என எழுதி வாங்கிக்கொண்டு அனுப்பிவிட்டார்கள். எதற்காக பிரச்சனை நடந்தது என்றால் ஜெயவேலிடம் இருந்து கிரையம் வாங்கிய பிறகு எனக்கு பாத்தியப்பட்ட நிலத்தில் உள்ள வரப்பை வெட்டுவதும், என் நிலத்தில் அத்துமீறி செல்வதுமாக இருந்து வந்தார்கள். பிரதிவாதிகள் விவசாய நிலத்தில் உள்ள வீட்டில் இருந்து ஊருக்குள் எந்த வழியில் செல்வார்கள் என்றால் அவர்களுக்கு ஊருக்குள் செல்ல வழிகள் இல்லை. ஜெயவேலுக்கு பாத்தியப்பட்ட நிலத்தில்தான் பிரதிவாதிகள் நான் கிரயம் பெறும் முன்பாகவே சென்று கொண்டிருந்தார்கள், நான் கிரையம் வாங்கிய பிறகும் பிரதிவாதிகள் அந்த வழியில் சென்றார்கள் நான் அதை தடுத்ததால்தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல.

5. பிரதிவாதிகள் செல்லும் வழியில் பிரச்சனை ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் அது எனது வீட்டிற்கு எந்த பக்கமாக உள்ளது என்றால் எனது வீட்டிற்கு மேற்கு பக்கமாக உள்ளது. மேற்படி பிரதிவாதிகள் செல்லும்

வழி எத்தனை அடி என்றால் ஒன்றரை அடி அல்லது 2 அடி அகலம் இருக்கும். அந்த வழியில் 4 சக்கர வாகனம் எல்லாம் சென்று கொண்டிருந்தது என்றால் இல்லை. அந்த நிலத்தை கிரையம் வாங்கும் முன்பாக ஜெயவேல் நிலத்தை வைத்திருந்தபோது அவருக்கு பாத்தியப்பட்ட நிலத்தில் இருந்துதான் 4 சக்கர வாகனங்கள் டிராக்டர் செல்லக்கூடிய அளவிற்கு வழி இருந்தது அதனை மறைத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஜெயவேலுவிடம் வாங்கிய சொத்து அதற்கு முன்பாக 1ம் பிரதிவாதி இந்திராவின் கணவர், 2, 3 பிரதிவாதிகளான ராஜேந்திரன், ரவீந்திரன் ஆகியோரின் தந்தை ஜெயராமனின் தந்தை வகுத்தன் என்கிற காணன் பெயரில்தான் இருந்தது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. மேற்படி வகுத்தன் என்கிற காணன் இருக்கும் போதிலிருந்தே பிரதிவாதிகள் நான் கிரயம் பெற்ற நிலத்தில் உள்ள பாதையில் சென்றுகொண்டிருந்தார்கள் என்றால் எனக்கு தெரியவில்லை.

6. நான் கிரயம் வாங்கிய நிலத்திற்கும் கட்டவடிச்சாம்பட்டிக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 200 மீட்டர் தூரம் இருக்கும். நான் கட்டவடிச்சாம்பட்டிக்கு செல்வதென்றால் எந்த பாதையில் செல்வேன் என்றால் நான் கிரயம் பெற்ற சொத்திற்கு அடுத்த சொத்து என்னுடையது அதன் வழியாக சென்று வருவேன். நான் மேற்படி ஊருக்குள் செல்ல மாற்று வழி உள்ளதா என்றால் ஆற்றுவழியாக அரை கிலோமீட்டர் சுற்றி செல்லலாம். மழைபெய்து ஆற்றில் தண்ணீர் வந்தாலும் அதில்தான் செல்வார்களா என்றால் ஆமாம் மழை வந்தாலும் ஒரே நாளில் வற்றிவிடும்

அதில் தண்ணீர் நிற்காது. நான் சொல்வது தவறானது நான் சொல்லும் மாற்று வழி இருந்தால் 2 கிலோ மீட்டர் சுற்றிதான் ஊருக்குள் வரவேண்டும் என்றால் சரியல்ல.

7. வழி பிரச்சனை ஏற்பட்டபோது பிரதிவாதிகளும் என்மீது கோட்டப்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியவில்லை. பிரதிவாதிகள் புகார் கொடுத்ததன் அடிப்படையில் போலிசார் வழிப்பாதைக்கு வந்து பார்த்துவிட்டு பிரதிவாதிகளுக்கு வேறு வழிகள் கிடையாது பிரச்சனை செய்யாதே என்று என்னிடம் அறிவுறுத்தினார்கள் என்றால் அவ்வாறு சொல்லவில்லை, வழித்தடம் சம்பந்தமாக வழக்கு இருப்பதால் யாரும் பிரச்சனை செய்யாதீர்கள் என்று தான் சொன்னார்கள். தற்போது அந்த வழியில் பிரதிவாதிகள் வந்தால் நான் தடுத்து வருகிறேன் என்றால் இல்லை. பிரதிவாதிகளுக்கு வழிவிடக்கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் வழக்கு தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.06.02 16:08:27 +0530